# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**

**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 6/2016** **நாள் : 31/05/2016**

**பெறுநர்**

மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

---

அன்பான தோழரே,

வணக்கம்,

இன்று 30.05.2016-ல் களப்பிரிவு ஊழியர்களின் இருவழிப்பாதையில் பதவி உயர்வு வழங்க, ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் தொடர்பாக ஏற்கனவே அமைக்கப்பட்ட வாரியக்குழுவின் அறிக்கையின் படி பேச்சுவார்த்தை நடத்த தொழிற்சங்கங்களை வாரியம் அழைத்திருந்தது. பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு, நமது தரப்பில் கீழ்கண்ட விஷயங்கள் வலியுறுத்தி பேசப்பட்டது.

1. மின்பாதை ஆய்வாளர்/ வணிக ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வில் முன் அனுபவம் தேவை என்பது இரு பதவிகளுக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

2. மின்பாதை ஆய்வாயளர் / வணிக ஆய்வாளர் பதவி உயர்வுக்கு வாரியப்பணியில் 8 ஆண்டுகள் தேவை என்பதை கைவிட வேண்டும். பதவி உயர்வுக்கான காலங்களை நிர்ணயம் செய்யக்கூடாது என்றும், மேலும் 26.05.2015 நாளிட்ட வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனையில் 5 ஆண்டுகள் எனத் தெரிவிக்கப்பட்டதை கணக்கில் எடுக்கவில்லை என்பதையும்சுட்டிக்காட்டப்பட்டது.

   அவ்வாறு ஏதாவது வகையில் குறிப்பிட்ட ஆண்டுகள் நிர்ணயம் செய்யப்படுமேயானால் அது மஸ்துார் பதவியை கணக்கிலெடுத்து கணக்கீடும் வகையில் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

3. களஉதவியாளர் முதன்மை பட்டியலின் அடிப்படையில் வணிக ஆய்வாளர் பதவியில் இளயைவர் செல்லுகின்ற போது அவரைவிட முதியவர்களாக உள்ள கம்பியாளருக்கு மிகை மின்பாதை ஆய்வாளர் பதவி வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்கின்ற அதே நேரத்தில்

(அ) மிகை மின்பாதை ஆய்வாளர் அவரது இளையவர் எந்த தேதியில் பதவி உயர்வு பெற்றரோ. அது முதல் நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும். என வலியுறுத்தப்பட்டது.

(ஆ) அதே போல அடுத்த பதவி உயர்வுகளுக்கு இந்த மிகை மின்பாதை ஆய்வாளர் பதவியில் சேர்ந்ததை கணக்கிலெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் மின்பாதை ஆய்வாளர் பதவி போல, வணிகஉதவியாளரிலிருந்து, வணிக ஆய்வாளர், பதவி கிடைக்காமல் காலதாமதம் ஆனால் அவர்கட்கும் மிகை வணிக ஆய்வாளர் என்ற பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்

4. கம்பியாளர்/ வணிக உதவியாளர் மற்றும் மின்பாதை ஆய்வாளர் / வணிக ஆய்வாளர் பதவிக்கான தகுதிக்காண் பட்டியல் (Panal) ஒரே நாளில் வெளியிடுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

5. களப்பிரிவு பதவி உயர்வு என்பது களஉதவியாளர் கேடரிலிருந்து வழங்க இருப்பதை மஸ்தூர் கேடர் என மாற்றி அமைக்க வேண்டும்.

6. களப்பிரிவில் முகவர் முதல்நிலை பதவி உயர்வுக்கு மின்பாதை ஆய்வாளர் /வணிக ஆய்வாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளை கணக்கீட்டு முதன்மை பட்டியலில் உள்ளவாறு, 05.11.2010 வாரிய குறிப்பாணையில், மூன்றாம் பத்தி நீக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதை, நாம் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பதோடு, இந்த உத்தரவினால் கோபி உள்ளிட்ட வட்டங்களில் பதவி இறக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி பேசப்பட்டது.

7. பதவி மாறுகின்ற வகையில், வணிக உதவியாளரிலிருந்து கம்பியாளராகவோ, கம்பியாளரிலிருந்து வணிக உதவியாளரகவோ அதேபோல மின்பாதை ஆய்வாளரிலிருந்து வணிக ஆய்வாளராகவோ அல்லது வணிக ஆய்வாளரிலிருந்து மின்பாதை ஆய்வாளராக அனுமதிக்க இயலாது என வாரியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நமது இந்த திருத்தங்களோடு செயல் உத்தரவாக (Executive Order) இல்லாமல் முத்தரப்பு ஒப்பந்தம் காணும் வகையில் அமைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

வாரிய தரப்பில் கலந்து கொண்ட அதிகாரிகள் அலுவலர்கள், நமது கருத்துக்களை உள்வாங்கி உள்ளனர்.ஆவண செய்வதாகவும் கூறியுள்ளனர்.

மேலும் 205 பேர்களுக்கு JE 2 -ம் நிலையிலிருந்து JE 1-ம் பதவி உயர்வில் கா லம் தாழ்ந்துள்ளதை வன்மையாக கண்டித்து விரைவில் உத்தரவு வழங்க கோரியுள்ளோம்.

933 கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டாளர் பதவி உயர்வு, விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளோம். கணக்கீட்டாளர் பதவி உயர்வு கோரிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனே துவங்க வேண்டும்.
- தெர்மல் நிலைய ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க வேண்டும்.
- NCTPS இரண்டாம் நிலைக்கு களப்பணியாளர் பதவிகள் அனுமதிக்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகள் வலியுறுத்திப் பேசப்பட்டது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

*** தோழர் கே.கனகராஜ் மாநில செயற்குழு உறுப்பினர் அவரது மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 10.06.2016 சென்னையில் நடைபெற உள்ளது. அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.**

*** மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 11.06.2016 அன்று தோழர்.டி.ஜே. நினைவகம் சென்னையில் நடைபெறும்.**